ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# திருஞானசம்பந்தர் தேவாரம் உணர்த்தும் வழிபாட்டுச் சிந்தனைகள்

**சி. அனிதா ராணி[1] & முனைவர் கு. இளங்குமார்[2]**
**[1]பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர் & [2]தமிழ்த் துறைத் தலைவர்,**
**தமிழ் உயராய்வு மையம், விவேகானந்தா கல்லூரி,**
**அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி மாவட்டம் - 629 701.**

60

**ஆய்வுச் சுருக்கம்:**

திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் பல வகையான வழிபாட்டு முறைகளைக் கூறியுள்ளார். வாழ்க்கையில் துன்பங்கள் நீங்கி, இன்பமாக வாழ வேண்டும் என்பதே வழிபாட்டின் நோக்கமாகத் திகழ்கின்றது. விளக்கு வழிபாடு, மலர் வழிபாடு, நறும்புகை வழிபாடு, தொண்டு வழிபாடு என்பனவாகிய வழிபாட்டு முறைகளை இவ்வாய்வின் வழி அறிய முடிகின்றது. அன்புடன் உள்ளம் உருகி வழிபடுபவர் மனத்தில் இறைவன் எழுந்தருளுவான் என்ற வாழ்வியல் சிந்தனை உணர்த்தப்படுகின்றது.

**முன்னுரை:**

சமயமே சமுதாயத்தின் ஆணிவேராகும். ஒவ்வொரு மனிதனும் சமய வாழ்க்கையை முறையாகக் கடைபிடித்தால் சமயம் தழைக்கும். சமுதாயம் முன்னேற்றமடையும். இறை வழிபாடே சமய வாழ்வின் அடிநாதமாக அமைகின்றது. திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் பலவகையான வழிபாட்டு முறைகளைச் சுட்டிச் செல்கின்றார். அவற்றில் சிலவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

**வழிபாடு-வரையறை:**

'வழிபாடு' என்ற சொல், வணங்குதல், கடம்படல், போற்றுதல், ஏத்துதல், வேண்டுதல், பிரார்த்தனை முதலிய சொற்களின் பொருளை உணர்த்தும் ஒரு சொல்லாகும்[1] என்று தமிழ்ப் பேரகராதி கூறுகிறது.

மனித மனம் ஒரு பலமற்ற கொடியைப் போன்றது. அதனால் தனித்து நிற்கவோ தன்னியலாகச் செயல்படவோ இயலாது. மானசீகமான ஏதாவது ஒன்றைப் பற்றிக் கொண்டு படர்ந்து எழுவதே அதன் இயல்பாகும். அது தெய்வமாக இருந்தால் அவனுடைய வாழ்வு சிறப்புடையதாக அமையும்.

**வழிபாடுகளுக்கு அடிப்படை**

**நன்றியுணர்வும், அச்சவுணர்வுமே ஆகும்.[2]**

என்று க.ப அறவாணன் குறிப்பிடுகிறார்.

தனக்கு நன்மைகளை அளிக்க வேண்டும் பொருட்டு இறைவனை வாழ்த்தி வணங்குவது 'வழிபாடு' என்று பொருள் காணலாம்.

**வழிபாட்டின் இன்றியமையாமை:**

மனிதர்கள் தங்கள் வாழ்க்கை சீரும் சிறப்புமுற அமைய வேண்டும் என்றும் நோயின்றி நீண்ட நாள்கள் உலகில் வாழ வேண்டும் என்றும் இறைவனை வழிபடுகின்றனர். இறைவனுடைய திருநாமங்களை உச்சரித்து அவன் திருவடியில் வீழ்ந்து வணங்குவதன் மூலம், தங்கள் கவலைகள்,

மனச்சுமைகள் குறையும் என்றும் நிம்மதியும், இன்பமும் கிடைக்கும் என்றும் கருதுகின்றனர். வாழ்க்கையில் துன்பங்கள் நீங்கி, இன்பமாக வாழ வேண்டும் என்பதே வழிபாட்டின் நோக்கமாகத் திகழ்கின்றது. ஒவ்வொரு நாளும் கடவுள் வழிபாடு செய்தல் நன்மை பயக்கும். உள்ளத்தை உயர்த்தும், அமைதி நல்கும். நாள்தோறும் காலையில் கடமைகளைத் தொடங்குவதற்கு முன்பும் இரவில் கடமைகளை முடித்த பிறகும் அமைதியாக உட்கார்ந்து கண்மூடி மனத்தை ஒருமைப்படுத்தி வழிபடல் வேண்டும் இவ்வாறு அன்றாடம் இருமுறையாவது செய்து வந்தால், மனத்திற்கு அமைதியும், ஆற்றலும் கிடைக்கும் என்கிறார் மு.வ.[3]

மேற்கூறிய கருத்துகள் வழிபாட்டின் இன்றியமையாமையை வலியுறுத்தி இக்காலத்திற்கு இன்றியமையாது தேவைப்படுவதை விளக்குகின்றன.

தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளும், பூசனை முறைகளுமே வழிபாடு என்றும் இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும் உள்ளத்தின் கதவுகளை இறைவனுக்காகத் திறந்து வைப்பதே வழிபாடு என்றும் கருதப்படுகின்றன.

உயர் நிலையான ஒன்றை உள்ளத்தால் நெருங்கவும், உணர முற்படவும். மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே வழிபாடு எனப்படும்.

**வழிபாட்டிற்கு அன்பே அடிப்படை:**

இறைவன் வாக்கும் மனமும் கடந்தவன். அடியவர் பொருட்டு நாம் வணங்கும் உருவங்களில் எழுந்தருளுகின்றான். அன்புடன் இட்ட மலர்களையும், நீரையும் ஏற்று அருள்புரிகின்றான். அன்போடு மலர்களால் அர்ச்சிக்க வேண்டும். அர்ச்சனைக்கு உயிர் அன்பு.

**"அப்படி பத்தி பழுத்த மனத்தினர்**
**அர்ச்சனை மெச்சிய செச்சை மணிப்புயன்"[4]**

என்பது அருணகிரி நாதரின் திருவாக்கு.

அன்பர்களின் அன்பு வழிபாட்டிற்குக் கட்டப்பட்டு, அவர்களின் இதயமாகிய குடிசையில் நுழைந்துவிடுகிறான்.

**"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்" [5]**

என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

இறைவனை அடைவதற்கு மிக எளிதான வழி உள்ளம் உருகி நினைப்பதுவேயாகும். அவனை நினைக்கும் போது மனம் உருக வேண்டும். உருகியதற்கு அடையாளமாகக் கண்ணீர் பெருக வேண்டும். என்பதனை திருஞானசம்பந்தர்,

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

(திருஞானசம். தேவா.பா. 3320)

இப்பாடல் ஈசனருள் பெற உண்மையான அன்பே போதும் என்பதை உணர்த்துகிறது.

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்"[6]

என்பது திருக்குறள்.

திருஞானசம்பந்தர் இறைவனை வணங்குவதற்கு அன்போடு அகங்குழைந்து வழிபட்டால் அத்தகைய அடியவர்களுக்கு நோய்இ துன்பம், வினை போன்ற தீமைகள் நீங்கி அவர்கள் இன்பம் பெறுவது உறுதியாகும் என்று அறிவுறுத்துகிறார்.

**உருகும் மனம் உடையார் தமக்கு உறுநோய் அடையாவே**

**(திருஞானசம். தேவா. பா. 102)**

**உம்மன்பினொடு எம்மன்பு செய் ஈசன் உறை கோயில்**

**(திருஞானசம், தேவா. பா. 110)**

**கையால் தொழுது தலைசாய்த்து உள்ளம் கசிவார்கள்**

**(திருஞானசம்: தேவா பா. 21159)**

**அன்போடு உருகும் அடியார்க்கு அன்பர்**

**(திருஞானசம். தேவா. பா. 2150)**

**அப்பொடு மலர் கொடங்கு இறைஞ்சி வானவர்**

**மெய்ப்பட அருள்புரி விசய மங்கையே**

**(திருஞானசம். தேவா. பா. 2981)**

**நானடை வாழ்வணம் அன்பு தந்த நலமே நினைவோமே**

**(திருஞானசம். தேவா. பா. 3927)**

தன்னை மறந்து அன்போடு வழிபட்டால் இறைவனோடு இரண்டறக் கலக்க முடியும் என்பதும், உடலாலும், உள்ளத்தாலும் புரிகின்ற வழிபாடுதான் மனிதனைப் பக்குவப்படுத்த முடியும் என்ற வாழ்வியல் சிந்தனை உணர்த்தப்படுகின்றது.

**விளக்கு வழிபாடு:**

விளக்கு புற இருளைப் போக்கக் கூடியது நம்மிடம் இருக்கும் அறியாமையாகிய அகஇருளை நீக்குபவன் இறைவன். அவனைச் சோதி வடிவாகப் போற்றுவது வழக்கம்.

**சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே**[7]

எனத் திருவிசைப்பா கூறுவதனைக் காணலாம்.

திருவண்ணாமலைத் தீப வழிபாடும், திருக்கார்த்திகை வழிபாட்டு முறையும் இக்கருத்தை அடியொற்றியே சமுதாயத்தில் இன்றும் பின்பற்றப்படுகின்றது. இதனை,

**கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து**

**கண்டவர் அகத்திரு ளனைத்துஞ்**

**வாய்த்துநின் றெழுந்து விளக்குறுஞ் சோண**

**சைலனே கயிலை நாயகனே"** [8]

என சிவப்பிரகாச சுவாமிகள் போற்றிப் பாடியுள்ளார்.

இத்தகைய சிறப்புடையதாகிய விளக்கு வழிபாடு குறித்து திருஞானசம்பந்தர்.

**நலம் தருமறை மொழியொடு நதியுறு**
**புனல் புகை ஒளி முதல்**
**மலரவை கொடுவழி படுதிறன்**
**(திருஞானசம்.தேவா .பா. 212)**

**துஞ்சுநாள் துறந்து தோற்றமில்லாச் சுடர்விடு**
**சோதி எம் பெருமான்**
**(திருஞானசம். தேவா. பா. 440)**

**ஓதி நன்குணர் வார்க்கு உணர்வுடை ஒருவன்**
**ஒளி திகழ் உருவம்**
**(திருஞானசம். தேவா.பா. 442)**

**வளைக்கை மடநல்லார் மாமயிலை வண் மறுகில்**
**துளக்கில் கபாலீச்சரத்தான் தொல்கார்த்திகை நாள்**
**தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்**
**(திருஞானசம். தேவா. பா. 1973)**

என வரும் பாடல்கள் மூலம் எடுத்துரைப்பார்.

சிவபெருமானை நினைந்து நாள்தோறும் காலையும், மாலையும் விளக்கேற்றி வழிபட்டால் அஞ்ஞான இருள் நீங்கி மெய்ஞ்ஞான விளக்கு நம்முள் சுடர்விடும் என்கிறார் திருஞானசம்பந்தர்.

**மலர் வழிபாடு:**

திருமூலர் இறைவனை வணங்குவதற்கு அன்போடு அகங்குழைந்து நீர்வார்த்து மலரிட்டு வணங்குதல் வேண்டும் என்று கூறியுள்ளார்.

**புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்**
**எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை**
**நண்ணறி யாமல் நழுவுகின் றாரே'**

மலரிட்டு வணங்காதாரைக் கண்டு இரங்குகின்றார் பட்டினத்தடிகள்,

**.......பல் பச்சிலையால்**
**எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க**
**ஈசன் இருக்கையிலே**
**மண்ணுண்டு போகு தையோ**
**கெடுவிற் இந்த மானிடமே**[10]

கந்தர் அநுபூதியில் அருணகிரி நாதர் பாடும் பாடலடிகள் ஒப்பு நோக்கத்தக்கது.

**முருகன் குமரன் குகனென்று மொழிந்து**

**உருகும் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்**[11]

திருஞானசம்பந்தர் தம்முடைய தேவாரத்தில் பாடல்களில் மலர்வழிபாடு பற்றி பல எடுத்துரைப்பார். அன்றலர்ந்த மலர்களைச் சாத்தி வணங்கி முக்தி பெற அடியவர்களே வாருங்கள் என்றும் சிவபெருமானை இலைகளையும். மலர்களையும் கொண்டு இரவிலும், நண்பகலும், மாலையும் மனம் நிலைத்து நிற்குமாறு வணங்க வேண்டும். சிவனை கார்காலத்தே மலரும் சிறந்த கொன்றை மலர்களைத் தூவி வழிபட வேண்டும்.

**வம்மின் அடியீர் நாண் மலரிட்டுத் தொழுது உய்ய**

**(திருஞானசம். தேவா.பா.110)**

**இலையார் மலர் கொண்டு எல் நண்பகல்**

**நிலையா வணங்க நில்லா வினைகளே**

**(திருஞானசம். தேவா. பா. 265)**

**காரிடு மாமலர்தூவிக் கறைமிடற்றானடி காண்போம்**

**(திருஞானசம். தேவா.பா. 429)**

**தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார் மலர்**

**இண்டை கட்டி வழிபாடு செய்யும் இடம்**

**(திருஞானசம், தேவா.பா.2703)**

**பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாம் அடியோம்**

**(திருஞானசம். தேவா. பா. 1250)**

**பறித்த மலர் கொடு வந்துமை ஏத்தும் பணியடியோம்**

**(திருஞானசம். தேவா. பா. 1254)**

இப்பாடலடிகள் மலர்வழிபாட்டினை விளக்கும்.

பூக்களை சுமந்தும் சிவன் புகழைக் காதாரக் கேட்டும். நாவாரப் பாடினாலும் கடைத்தேறலாம். நம்முடைய துன்பங்கள் நீங்க வேண்டுமானால் இலைகளையும், மலர்களையும் கொண்டு இறைவனை வணங்க வேண்டும் என்பதனை.

**நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்**

**சா நாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே**

**பூ நாளும் தலைசுமப்பப் புகழ் நாமஞ் செவி கேட்ப**

**நா நாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே**

**(திருஞானசம். தேவா.பா. 1908)**

**இலையுறு மலர்கள் கொண்டு ஏத்துதும் யாம்**

**(திருஞானசம், தேவா.பா.2824)**

**விரிபுனல் வடம்படு மலர்கொடு வணங்குமின் வைகலும்**

**(திருஞானசம். தேவா. பா. 3094)**

விரிந்து பரவும் புனித நீர் கொண்டு அபிஷேகம் செய்தும், மலர் மாலைகளைச் சார்த்தியும் தினந்தோறும் இறைவனை வழிபட வேண்டும் என்று மலர்வழிபாடு பற்றி திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

**நறும்புகை வழிபாடு;**

மலர் வழிபாட்டைப் போலவே மணம் பொருந்திய நறும்புகை வழிபாடும் வழிபாட்டில் இன்றியமையாததோர் இடத்தைப் பெற்றுள்ளது என்பது வெள்ளிடை உருவ மலை செயற்கரும் செயல்கள் புரிந்த அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரே குங்கிலியக் கலய நாயனார். இவர் இறைவனுக்கு நறும்புகை வழிபாடு செய்தே முக்தி அடைந்தவர்

மலர்களின் நன்மணமும். தூபத்தின் நறுமணமும் சேர்த்து வழிபாடு செய்யும் போது இறை நம்பிக்கையும், தனக்குள் ஒரு புத்துணர்ச்சியும், ஆன்மீக எழுச்சியும், சுற்றுப்புறத் தூய்மையும் இயல்பாகவே அமைகின்றன.

இவ்வகையில் திருஞானசம்பந்தர் நல்ல மணமிக்க நறும்புகை வழிபாடு செய்து இறைவனை வணங்குதல் வேண்டும் என்பதை.

**தொங்கலும் கமழ்சாந்து மகிழ்புகையும் தொண்டர் கொண்டு**
**அங்கையால் தொழுதேத்த அருச்சனைக்கன் அருள் செய்தான்"**

**(திருஞானசம். தேவா.பா.659)**

**பூத்தர வங்களோடும் புகை கொண்டாடி போற்றி**

**(திருஞானசம். தேவா. பா. 3428)**

நம்முடைய ஆன்ம வளர்ச்சிக்கும், சுற்றுப்புறத் தூய்மைக்கும் நறும்புகையிடுதல் சிறந்தது என்பது உணர்த்தப்படுகிறது.

**திருக்கோவில் வழிபாடு;**

இறைவனுக்குக் கோவில் அமைத்து வழிபடுதல் இந்துக்களின் மரபாம். சைவர்கள் திருக்கோவிலில் பெருமானை எழுந்தருளச் செய்து வழிபடுதல் பழங்காலம் தொட்டே நடைமுறையில் இருந்து வரும் ஒன்றாகும்.

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று**[12]

என ஔவையாரும்.

**ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே**[13]

என மெய்கண்டாரும் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

திருவண்ணாமலை திருக்கோவிலை தொழுவார் வினைகள் தவறாது கெடும் என்பர் திருஞானசம்பந்தர். இதனை,

**உண்ணாமுலை உமையாளொடும்**
**உடனாகிய ஒருவன்**

**பெண்ணாகிய பெருமான் மலை**
**திருமாமணி திகழ**
**மண்ணார்ந்தன அருவித்திரள்**
**மழலைம் முழவு அதிரும்**
**அண்ணாமலை தொழுவார் வினை**
**வழுவாவண்ணம் அறுமே**

**(திருஞானசம்.தேவா .பா. 97)**

என்னும் பாடலின் வழி அறிந்து உணரலாம்.

சமய வாழ்வில் ஈடுபடுபவர்கள் திருக்கோவிலை மையமாகக் கொண்டு வாழ்தல் வேண்டும் என்னும் நெறி உணர்த்தப்படுகிறது

**தொண்டு வழிபாடு:**

உடலால் கைகூப்பித் தொழுதலும், பாடி தொழுதலும், வலம் வருதலுமாகிய செயல்களோடு மட்டுமன்றித் திருக்கோவிலையும், அதனைச் சார்ந்த திருக்குளத்தையும், மதில் சுவர்களையும், கோயிலுக்குச் செல்லும் பாதைகளையும் தூய்மைப்படுத்தித் தொண்டு செய்தல் வேண்டும்.

உழவார படையைக் கையிலேந்தி மற்றவர்க்கு எல்லாம் முன்னோடியாக திகழ்ந்தவர் திருநாவுக்கரசர்,

**ஆருர் அமர்ந்தான் அடிநிழற் கீழ்த்**
**தொண்டு பட்டு உய்ம்மின்களே**[14]

எனத் தம் தேவாரத்துள் பாடியுள்ளார்.

திருஞானசம்பந்தர் நாம் முற்பிறவிகளில் செய்த வினைகளுக்கேற்பவே இப்பிறவியில் பிராரத்தம் வந்தூட்ட அவற்றாலாய பயன்களை நுகர்கிறோம் என்று சொல்லும் அடியர்களைப் பார்த்து இவற்றிலிருந்து விடுதலைப் பெறும் வழியை நீவிர் தேடாதிருப்பது உமக்கு குறையன்றோ? நாம் அனைவரும் சிவபிரானுக்கு அடியவர்கள் ஆவோம்; அவ்விறைவனை நோக்கிச் சரியை, கிரியை முதலான சிவப்பணிகளைச் செய்து அவ்விறைவன் கழலைப் போற்றுவோம் அவ்வாறு செய்யின் நாம் செய்த பழவினைகள் நம்மை வந்து அணுகாது. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை என கூறுகின்றார்.

இதனை.

**அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவிர்**
**உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே**
**கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றதும் நாமடியோம்**
**செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்**

**(திருஞானசம். தேவா. பா. 1249)**

என்னும் பாடல்வழி அறியலாம்.

இறைவனுக்குத் தொண்டு செய்து நம் பாவங்களையும், துன்பங்களையும் நீக்கிக்கொள்ளலாம் என்னும் வாழ்வியல் சிந்தனை உணர்த்தப்படுகின்றது.

**தொகுப்புரை:**

1. வழிபாடு மனிதனைப் பக்குவப்படுத்துகிறது.
2. வழிபாட்டிற்கு அன்பே அடிப்படையாக அமைகின்றது.
3. திருக்கோவில்களில் விளக்கு வழிபாடு. மலர் வழிபாடு, நறும்புகை வழிபாடு உழவாரப் பணி செய்தல் முதலான உடலால் செய்யும் புறத்தொண்டுகளைப் புரிதல் வேண்டும்.
4. தொண்டு செய்வதன் வழி நம் வினைகள் நீங்கி இறைவனை எளிதில் அடையலாம்.

**அடிக்குறிப்புகள்:**

1. வையாபுரிப்பிள்ளை, எஸ், தமிழ்ப் பேரகராதி தொகுதி-5, பக் 3545-46
2. அறவாணன். க.ப. மரவழிபாடு திராவிட ஆப்பிரிக்கா ஒப்பீடு, ப.17
3. வரதராசன், மு நல்வாழ்வு பக் 26-27
4. அருணகிரிநாதர், திருப்புகழ் பா.352.
5. திருநாவுக்கரசர் தேவாரம், 5-90-9
6. திருக்குறள். 71
7. ஒன்பதாம் திருமுறை, திருவிசைப்பா. பா.1
8. சிவப்பிரகாசர், சோண சைலமாலை. பா.8.
9. திருமந்திரம் பா 1828
10. பட்டினத்தார் பாடல்கள். பொது. பா.301.
11. அருணகிரிநாதர், கந்தர் அநுபூதி பா:15.
12. ஔவையார். கொன்றை வேந்தன் பா.2
13. மெய்கண்டார், சிவஞான போதம் நூ 12.
14. திருநாவுக்கரசர். தேவாரம் 4-102-1.

**திறவுச் சொற்கள்**

1. திருஞானசம். தேவா பா. – திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்
2. திருநாவுக்கரசர், தேவாரம்.

   5-90-9 - முதல் எண் திருநாவுக்கரசர் தேவாரத்தில் உள்ள திருமுறையையும், இரண்டாவது எண் பதிகத்தையும், மூன்றாவது எண் பாடல் எண்ணிக்கையையும் குறிக்கும்.

3. நூ. - நூற்பா
4. ப. - பக்கம்
5. பக். - பக்கங்கள்
6. பா. - பாடல்